**செய்தி வெளியீடு எண்: 46/2026** **நாள்: 12.06.2026**

**பத்திரிகைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் "மெட்ரோ மேனர்ஸ் - பொறுப்பான பயணம், பாதுகாப்பான பயணம்:" விழிப்புணர்வு பிரச்சாரத்தை அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையத்தில் நடத்தியது**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், பயணிகள் பாதுகாப்பாகவும், பண்போடும், ஒழுக்கத்தோடும் பயணம் செய்வதை ஊக்குவிக்கவும், அவர்களின் பயண அனுபவத்தை மேம்படுத்தவும் "மெட்ரோ மேனர்ஸ் - பொறுப்பான பயணம், பாதுகாப்பான பயணம்" (Metro Manners – Smart Travel, Safe Travel) என்ற விழிப்புணர்வு பிரச்சாரம் அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையத்தில் நடைபெற்றது.

பயணிகள் எந்தவித சிரமமும் இன்றி வரிசையாகச் செல்வதற்கும், அவர்களின் பயணம் மகிழ்ச்சிகரமாக அமைவதற்கும் தேவையான எளிய பழக்கவழக்கங்களை ஊக்குவிப்பதே இந்தத் பிரச்சாரத்தின் நோக்கமாகும். பொறுப்பான பயணிகளின் பங்களிப்பு எவ்வளவு முக்கியம் என்பதை உணர்த்தும் வகையில் அமைந்த இந்நிகழ்ச்சியில் மெட்ரோ பயணிகள், தன்னார்வலர்கள் மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பணியாளர்கள் எனப் பலரும் மிகுந்த ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

இந்த புதிய முயற்சியின் ஒரு பகுதியாக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தேசிய மாணவர் படையுடன் (NCC) இணைந்து, "1 [TN] SIG COY NCC" பிரிவைச் சேர்ந்த மொத்தம் 25 NCC மாணவர்கள் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இவர்கள் 10.06.2026 முதல் 12.06.2026 ஆகிய தேதிகளில் காலை 8 மணி முதல் 11 மணி வரை அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ நிலையத்தில் பயணிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பொறுப்பான பயண முறைகளை ஊக்குவிக்கும் வகையில் விழிப்புணர்வு பிரச்சாரத்தை நடத்தினர்.

சென்னை மெட்ரோவின் Civic Ambassadors ஆக நியமிக்கப்பட்ட இந்தத் தன்னார்வலர்கள், பயணிகளுடன் கலந்துரையாடி நல்வழிப் பயண முறைகள் குறித்து எடுத்துரைத்தனர். இதன் மூலம், நெரிசல் மிகுந்த வேளையில் (Peak Hours) பயணிகள் எந்தவித சிரமமும் இன்றி வரிசையாகவும், சீராகவும் செல்வதை உறுதி செய்ய அவர்கள் உதவினர்.

**முக்கிய மெட்ரோ பயண விதிமுறைகள் (Key Metro Etiquette Messages)**

இந்த விழிப்புணர்வு பிரச்சாரத்தில் பின்வரும் முக்கிய வழிமுறைகள் வலியுறுத்தப்பட்டன:

- **இறங்குபவர்களுக்கு முன்னுரிமை:** இரயிலில் ஏறுவதற்கு முன், உள்ளே இருக்கும் பயணிகள் முதலில் கீழே இறங்க வழிவிடுங்கள்.
- **இரயில் கதவுகளை அடைக்காதீர்கள்:** இரயில் கதவுகளுக்கு அருகில் நின்று கொண்டு, பயணிகள் வந்து செல்வதற்குத் தடையாக இருக்காதீர்கள்.
- **மஞ்சள் கோட்டைத் தாண்டாதீர்கள்:** நடைமேடையில் இரயிலுக்காகக் காத்திருக்கும்போது, பாதுகாப்பு மஞ்சள் கோட்டைத் தாண்டி நிற்க வேண்டாம்.
- **நகரும் படிக்கட்டு விதிமுறை:** நகரும் படிக்கட்டுகளை பயன்படுத்தும்போது, மற்றவர்களுக்கு வழிவிடும் வகையில் "இடப்பக்கம் நில்லுங்கள், வலப்பக்கம் நடங்கள்" (Stand Left, Walk Right) என்ற முறையைப் பின்பற்றுங்கள்.
- **ஹெட்போன்களைப் பயன்படுத்துங்கள்:** இரயிலில் பயணிக்கும்போது பாடல்கள் கேட்பதற்கோ அல்லது வீடியோக்கள் பார்ப்பதற்கோ கட்டாயம் ஹெட்போன்களை (Headphones) பயன்படுத்துங்கள்.

NCC மாணவர்களின் இந்த முயற்சியைப் பயணிகள் வெகுவாகப் பாராட்டினர். மேலும், இந்த விழிப்புணர்வு பிரச்சாரம் நெரிசல் மிகுந்த வேளையில் கூட்ட நெரிசலைச் சீரமைக்க உதவியதாகவும், பயணிகளிடையே ஒரு நல்ல ஒத்துழைப்பை உருவாக்கியதாகவும் கூறி, சென்னை மெட்ரோவின் இந்த முயற்சியை அவர்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

இந்த விழிப்புணர்வு பிரச்சாரம் மிகச் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற உறுதுணையாக இருந்த அனைவருக்கும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. மெட்ரோ பயணிகளிடையே பொறுப்பான பயண முறைகளையும், சமூக விழிப்புணர்வையும் ஒரு நற்பண்பாக வளர்க்கும் நோக்கில், இந்தத் திட்டம் அடுத்தடுத்த கட்டங்களாக மற்ற மெட்ரோ நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

**வெளியீடு: கூடுதல் இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**